## சுருக்கம்

மாற்றுத்திறனாளிகள் நலத் துறை – மாற்றுத் திறனாளிகளுக்கு பராமரிப்பு உதவித் தொகையினை ஒருங்கிணைந்த முறை (Centralised mode of payment) வாயிலாக நேரடி பயன் முறையில் (Direct Benefit Transfer) முன்னோட்டமாக கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, மயிலாடுதுறை மற்றும் தருமபுரி ஆகிய ஐந்து மாவட்டங்களில் உள்ள பயனாளிகளுக்கு உதவித் தொகை வழங்குதல்– ஆணை வெளியிடப்படுகிறது.

---

## மாற்றுத் திறனாளிகள் நல (மா.தி.ந–1.2)த் துறை

அரசாணை (D) எண்.19

நாள் 27.08.2024
குரோதி, ஆவணி– 11,
திருவள்ளுவர் ஆண்டு, 2055.

படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண்.66, மாற்றுத் திறனாளிகள் நல (மா.தி.ந–2)த் துறை, நாள் 12.07.2013.
2. மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநரின் கடித எண். 3885/மாதிந.2,3/2023, நாள் 13.05.2024 மற்றும் 20.06.2024.

-----

ஆணை:

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் மாற்றுத்திறனாளிகளுக்கான பராமரிப்பு உதவித் தொகை வழங்கும் திட்டத்தின் கீழ், 2013–2014 ஆம் நிதியாண்டிலிருந்து இத்திட்டத்திற்கென வரவு–செலவு திட்ட மதிப்பீட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகைக்குள் ஏற்கனவே பயன்பெறும் பயனாளிகளுக்கு மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் மூலமாக ஒவ்வொரு மாதமும் மைய வங்கி முறையின் (Core Banking System) கீழ் பராமரிப்பு உதவித் தொகை வழங்க அனுமதியும், மேலும், கூடுதலாக பயனாளிகள் கண்டறியப்பட்டால் இத்திட்டத்தின் கீழ் பராமரிப்பு உதவித் தொகை வழங்க வரவு–செலவு திட்டத்திற்கு மேலாக கூடுதலாக நிதி ஒதுக்கீடு தேவைப்படின், அதற்குரிய கருத்துருவினை செப்டம்பர் மற்றும் பிப்ரவரி மாதங்களில் அரசுக்கு அனுப்பி வைக்க மாற்றுத்திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அனுமதி வழங்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதங்களில் மாற்றுத்திறனாளிகளுக்கான பராமரிப்பு உதவித்தொகை வழங்கும் திட்டத்தின்கீழ் உள்ள பயனாளிகளது பட்டியல்கள், தொடர்புடைய மாவட்ட அலுவலகங்களில் உள்ள பணியாளர்களால் மாதம்தோறும் தயார் செய்யப்பட்டு மாற்றுத்திறனாளிகளுக்கான பராமரிப்பு உதவித்தொகை வழங்கும் திட்டத்தின்கீழ் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர்களால் ஏற்பளிப்பு செய்யப்பட்டு, ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேலாண்மை தளத்தின் (IFHRMS) மூலமாக மாவட்ட கருவூலங்கள் மற்றும் சம்பளக்கணக்கு அலுவலகங்களில் சமர்ப்பிக்கப்படுவதன் மூலம் பயனாளிகளின் வங்கி கணக்குகளில் நேரடியாக வரவு வைக்கப்பட்டு வருகிறது என்றும் இம்முறையினால் உதவித்தொகை சென்றடைவதில் காலதாமதம் ஏற்படுவதால் மாற்றுத்திறனாளிகளின் மருத்துவ சிகிச்சை மற்றும் அடிப்படை தேவைகள் உரிய காலத்தில் பயன் பெற இயலாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளதை தவிர்த்திடவும், இவ்வுதவித்தொகை உரிய நேரத்தில் பயனாளிகளின் வங்கிக்கணக்கில் சேர்த்திடும் நோக்கத்தில் கீழ்க்கண்ட இனங்களுக்கு ஆணை பிறப்பித்திட மாற்றுத் திறனாளிகள் நல இயக்குநர் அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளார்:-

I. மேற்குறித்த நடைமுறைக்கு மாற்றாக, "கலைஞர் மகளிர் உரிமைத்திட்டத்தில்" நேரடி பயன் அடிப்படையில், பயனாளிகளுக்கு உரிமைத் தொகை வழங்கப்படுவதை போன்றும், சமூகப் பாதுகாப்புத் திட்ட பயனாளிகளுக்கு "மாதாந்திர ஓய்வூதிய தொகை" வழங்கப்படுவதை போன்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான பராமரிப்பு உதவித் தொகையினை நேரடி பயன் அடிப்படையில் (Direct Benefit Transfer), ABPS-Aadhaar Based payment system மற்றும் ACH-Automated Clearing House முறையில் (Centralised payment) பயனாளிகளது வங்கி கணக்குகளில் நேரடியாக வரவு வைத்திட ஏதுவாக தொடர்புடைய கணக்குத் தலைப்புகளிலிருந்து உரிய தொகையினை பெற்று Single Nodal Agency (SNA) Account-ற்கு மாற்றம் செய்திட அதிகாரம் வழங்கிடும் வகையில், மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர் அவர்களுக்கு அதிகாரமளித்து ஆணைகள் பிறப்பித்திடவும்;

II. தற்போது நடைமுறையிலுள்ள 3 கணக்கு தலைப்புகளிலிருந்து மாதாந்திர பராமரிப்பு உதவித் தொகையினைப் பெற்று, முன்னோட்டமாக (On pilot basis) இரண்டு மாவட்டங்களில் உள்ள பயனாளிகளுக்கு மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநரக அலுவலகம் மூலமாக வழங்கிட ஏதுவாக, மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர் அவர்களுக்கு அதிகாரமளித்து ஆணைகள் பிறப்பித்திடவும்;

III. மேலும், பத்தி (i)-இல் குறிப்பிட்டபடி நேரடி பயன் (Direct Benefit Transfer) ABPS-Aadhaar Based Payment System மற்றும் ACH-Automated Clearing House மூலமாக மாற்றுத்திறனாளிகளுக்கான பராமரிப்பு உதவித் தொகையினை வரவு வைத்திட முன்னோட்டமாக (On pilot basis) இரண்டு மாவட்டங்களில் உள்ள பயனாளிகளுக்கு முதற்கட்டமாக மாதாந்திர பராமரிப்பு உதவித்தொகையினை நேரடியாக வரவு வைத்திடவும், பின்வரும்

மாதங்களில் இம்முறையினை அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்திடவும் ஆணைகள் வழங்கிடவும்;

IV. மேலும், மாற்றுத்திறனாளிகளுக்கான மாதாந்திர பராமரிப்பு உதவித்தொகை வரவு வைக்கப்பட்டதற்கான தகவலை பயனாளிகளின் அலைபேசி எண்ணிற்கு குறுஞ்செய்தி வாயிலாக அனுப்பி வைக்க தமிழ்நாடு மின்னாளுமைக்கு (TNeGA) அதிகாரம் அளிக்கவும். அதற்குண்டான செலவினத் தொகையினை அதற்குறிய கணக்குத் தலைப்பிலிருந்து தமிழ்நாடு மின்னாளுமைக்கு (TNeGA) பெற்று வழங்கிட மாற்றுத்திறனாளிகள் நல இயக்குனருக்கு ஆணைகள் வழங்கிடவும்;

V. மேலும், இந்திய தேசிய கொடுப்பனவு கழகம் (National Payment Corporation of India) மூலம் சரிபார்க்கப்பட்டு ACH- Account Based payment system வாயிலாக வங்கி கணக்குகளுக்கு நேரடி பயன் முறையில் (Direct Benefit Transfer) வரவு வைக்கப்பட்ட பயனாளிகளுக்கான சேவைத்தொகையினை தற்போது நடைமுறையிலுள்ள 3 கணக்குத் தலைப்புகளுக்கான இந்நிதியாண்டின் ஒதுக்கீட்டிலிருந்து, இயக்குநர் (மாற்றுத்திறனாளிகள் நலம்) அவர்கள் இந்திய தேசிய கொடுப்பனவு நிறுவனத்திற்கு பெற்று வழங்கிட ஆணைகள் பிறப்பித்திடும்படியும் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. மாற்றுத் திறனாளிகள் நல இயக்குநரின் கருத்துருவினை நன்கு பரிசீலனை செய்து பின்வரும் இனங்களுக்கு அரசு ஆணையிடுகிறது:-

i. மாற்றுத்திறனாளிகளுக்கான பராமரிப்பு உதவித் தொகையினை நேரடி பயன் அடிப்படையில் (Direct Benefit Transfer), ABPS-Aadhaar Based payment system மற்றும் ACH-Automated Clearing House முறையில் (Centralised payment) பயனாளிகளது வங்கி கணக்குகளில் நேரடியாக வரவு வைத்திட ஏதுவாக தொடர்புடைய கணக்குத் தலைப்புகளிலிருந்து உரிய தொகையினை பெற்று Single Nodal Agency (SNA) Account-ற்கு மாற்றம் செய்திட மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநருக்கு அதிகாரமளிக்கப்படுகிறது.

ii. தற்போது நடைமுறையிலுள்ள பின்வரும் 3 கணக்கு தலைப்புகளிலிருந்து மாதாந்திர பராமரிப்பு உதவித் தொகையினைப் பெற்று, முன்னோட்டமாக (On pilot basis) கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, மயிலாடுதுறை மற்றும் தருமபுரி ஆகிய ஐந்து மாவட்டங்களில் உள்ள பயனாளிகளுக்கு மாற்றுத்திறனாளிகள் நல இயக்குனரக அலுவலகம் மூலமாக வழங்கிட ஏதுவாக, மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநருக்கு அதிகாரமளிக்கப்படுகிறது.

"2235 - சமூகப் பாதுகாப்பும் நலனும் -02 - சமூக நலன்-101 - மாற்றுத் திறனாளிகள் நலன் - மாநிலச் செலவினங்கள்-CD - கடுமையாக பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கான பராமரிப்பு படிகள் -309 - உதவித் தொகை-03 - குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை."

[IFHRMS த.தொ.கு 2235-02-101- CD -30903]

"2235 – சமூகப் பாதுகாப்பும் நலனும் -02 – சமூக நலன்-101 – மாற்றுத் திறனாளிகள் நலன் – மாநிலச் செலவினங்கள்-CM – தசைக் கோளாறு நோயால் பாதிக்கப்பட்ட நபர்களுக்குப் பராமரிப்பு மானியங்கள்-309 – உதவித் தொகை-03 – குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை."

[IFHRMS த.தொ.கு 2235-02-101-CM-30903]

"2235 – சமூகப் பாதுகாப்பும் நலனும் – 02 – சமூக நலன்-104 – முதியோர், இயலாமையுற்றோர் மற்றும் ஆதரவற்றோர் நலன் – மாநிலச் செலவினங்கள் – KQ – தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பராமரிப்பு உதவித் தொகை வழங்குதல் – 309 – உதவித் தொகை -03- குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை."

[IFHRMS த.தொ.கு 2235-02-104- KQ -30903]

iii. நேரடி பயன் (Direct Benefit Transfer) ABPS-Aadhaar Based Payment System மற்றும் ACH-Automated Clearing House மூலமாக மாற்றுத் திறனாளிகளுக்கான பராமரிப்பு உதவித் தொகையினை வரவு வைத்திட முன்னோட்டமாக (On pilot basis) கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, மயிலாடுதுறை மற்றும் தருமபுரி மாவட்டங்களில் உள்ள பயனாளிகளுக்கு முதற்கட்டமாக மாதாந்திர பராமரிப்பு உதவித் தொகையினை நேரடியாக வரவு வைத்திடவும், பின்வரும் மாதங்களில் இம்முறையினை அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்திடவும் மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநருக்கு அதிகாரமளிக்கப்படுகிறது.

iv. மேலும், மாற்றுத்திறனாளிகளுக்கான மாதாந்திர பராமரிப்பு உதவித்தொகை வரவு வைக்கப் பட்டதற்கான தகவலை பயனாளிகளின் அலைபேசி எண்ணிற்கு குறுஞ்செய்தி வாயிலாக அனுப்பி வைக்க தமிழ்நாடு மின்னாளுமைக்கு (TNeGA) அதிகாரம் அளிக்கவும், அதற்குண்டான சேவைத் தொகை மற்றும் இந்திய தேசிய கொடுப்பனவு கழகம் (National Payment Corporation of India) மூலம் சரிபார்க்கப்பட்டு ACH-Account Based payment system வாயிலாக வங்கி கணக்குகளுக்கு நேரடி பயன் முறையில் (Direct Benefit Transfer) வரவு வைக்கப்பட்ட பயனாளிகளுக்கான சேவை கட்டணம் ஆகியவற்றிற்கான மொத்த செலவினத்தொகை ரூ.28,03,573/-ஐ (ரூபாய் இருபத்து எட்டு இலட்சத்து மூன்று ஆயிரத்து ஐந்நூற்று எழுபத்து மூன்று மட்டும்) பின்வருமாறு மூன்று கணக்குத் தலைப்புகளிலிருந்து தமிழ்நாடு மின்னாளுமை நிறுவனம் (TNeGA), மற்றும் இந்திய தேசிய கொடுப்பனவு கழகம் (National Payment Corporation of India) ஆகிய நிறுவனங்களுக்கு பெற்று வழங்கிட மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

| வ. எண். | கணக்குத் தலைப்பு | பயனாளிகளின் எண்ணிக்கை | NPCI சேவை கட்டணம் (ரூ. 0.59x12) | TNeGA குறுஞ் செய்தி சேவை கட்டணம் (ரூ. 0.40x12) | மொத்த செலவினம் ரூ. |
|---|---|---|---|---|---|
| 1. | 2235-02-101-CD-30903 | 220268 | 1559427 | 1057238 | 2616665 |
| 2. | 2235-02-101-CM-30903 | 4357 | 30848 | 20914 | 51761 |
| 3. | 2235-02-104-KQ-30903 | 11376 | 80542 | 54605 | 135147 |
| | மொத்தம் | 235991 | 1670816 | 1132757 | 2803573 |

6. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சாரா எண்.587/நிதி(சந)/2024, நாள் 24.08.2024-இன் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சிஜி தாமஸ் வைத்தியன்,
அரசு செயலாளர்.

பெறுநர்
மாற்றுத் திறனாளிகள் நல இயக்குநர், சென்னை-5.
அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்கள்.
மாற்றுத் திறனாளிகள் நல இயக்குநர், சென்னை-5. (வழி)
மாநிலக் கணக்காயர், சென்னை-18.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை-35.
மாநில கணக்காயர் சென்னை-18.
நகல்:
செயலரின் முதுநிலை முதன்மை தனிச் செயலர்,
மாற்றுத் திறனாளிகள் நலத்துறை, சென்னை-9.
நிதித் (ச.ந/வ.செ.பொ.-I)துறை, சென்னை-9.
இருப்பிட தணிக்கை அலுவலர், சென்னை-9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர் 27/8/24
27/8/2024